BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# சித்தேரி இனமக்களின் இறுதி சடங்குமுறைகள்

முனைவர் கோ.பிரபு
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, செல்வம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
நாமக்கல்-03, மின்னஞ்சல்: mani.prabu1984@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சடங்குமுறைகள் பிற சமுதாயத்தினரை காட்டிலும் சித்தேரி மலையாளி மக்களிடம் வேறுபட்டதாகவே காணப்படுகிறது. இறந்தவர்கள் மோட்சம்பெற கரிராமன் என்ற குலதெய்வத்தை வணங்கி உடலுக்கு அபிஷேகம் செய்கின்றனர். மலையாளி மக்களின் ஊர்கவுண்டன் கங்காணி அச்சமுதாயத்தின் மதிப்புமிக்கவராக இருந்திருக்கின்றனர் என்பதை அறியமுடிகிறது. புதைக்கும் மண்ணின் தன்மைகொண்டு அவர்களின் பாவபுண்ணியங்கள் கணக்கிடப்படுகிறது. இடுகாட்டிற்கு பெண்கள் செல்வது அக்குலத்தின்வழக்கமாக உள்ளது. சங்ககால மக்களின் இறப்புச் சடங்கினை போல இவர்கள் பின்பற்றுவது அவர்களின் பழமை எச்சத்தை அறியமுடிகிறது. வெள்ளிக்கிழமை இறந்தால் அவர்கள் இறைவனிடம் சேர்வர் என்பதும் புதைத்த மூன்று நாட்கள் அவர்களது ஆவிஅவ்விடத்திலேயே சுற்றும் என்பது அவர்களின் நம்பிக்கையாகும்.

**குறிச் சொற்கள்:** சித்தேரிமலை, இனவரைவியல், தேர், கட்டில், அவுல்பொரி, குங்குமம், திருநீறு, மண்குடவை, பெண்கள் சுடுகாடு செல்லுதல், மக்கள் நம்பிக்கை.

## முன்னுரை

உலகில் பிறக்கும் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. மனித வாழ்க்கை பிறப்பில் தொடங்கி இறப்பு வரை பல்வேறு சடங்குகளைக் கொண்டுள்ளன. இறப்புச் சடங்குகள் குறிப்பாக ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும் மறுவுலக எண்ணத்தை கூறுவதாக அமைந்துள்ளது. உயிரில்லாத உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தும் நிகழ்வாக உள்ளது. இத்தகைய சடங்குகள் ஒவ்வொரு இனமும் மாறுபாட்டுடன் காலங்காலமாய்ப் பின்பற்றி வருகின்றது.அத்தகைய வகையில் சித்தேரி மலையானது தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்திற்கு உட்பட்டது அவ்மலையானது அரூர் பேருந்து நிலையத்தில் இருந்து 26 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இங்கு 16000 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு வாழும் மக்கள் மலையாளி இன மக்கள் தங்களுக்கென்று தனி மரபை மலையாளியின மக்கள் பின்பற்றுவதை இறப்பு சடங்குகள் வழி கானலாம். இறந்தவரை உயிருடன் இருப்பவரிடம் இருந்து பிரித்து ஏற்கனவே இறந்துபோன மூதாதையருடன் சேர்ப்பதே ஈமச்சடங்கு செய்வதாகும். இறந்தவர்தன் குடும்பத்தினருடன் கொண்ட பாசத்தால் மீண்டும் ஆவியாக வந்து உலவலாம் என்ற நம்பிக்கையில் அவர்பயன்படுத்திய பொருட்களை அவருடன் சேர்த்துப் புதைப்பதுண்டு. வாழும் போது நிறைவேறாத ஆசைகளை மறுஜென்மத்தில் நிறைவேற்ற முற்படுவர்என்ற நம்பிக்கையும் உள்ளது.

வெள்ளிக்கிமையில் உயிர்துறப்போர் இறைவனடிச் சேருவர் என்ற எண்ணம் உண்டு. நிராசையோடு இறப்பவர் இறைவனோடு சேர துன்பப்படுவர். இறந்தவர்கள் ஆவி இடுகாட்டிலிருந்துத் திரும்பி வரும் என்று நம்பினர். இதனால் அவர்களுக்கு பல்வேறு விதமான சடங்குகளைச் செய்வதன மூலம்இறந்தவரின் ஆத்மா சொர்க்கம் அடையும் என்பதை,

*“இவ்வுலகில் நல்லவர்களாக வாழ்ந்து இயற்கை மரணமடைந்தவர்களின் ஆவி நன்மை செய்யும்”*

*(கொங்கு நாட்டுப்புற தெய்வ வழிபாடு, பக்.44-45 )*

என்கிறார் தே. ஞானசேகரன்.

பல்வேறு நாடுகளில் இறப்பு பற்றி கருத்துகளும் இறப்பு சடங்குகளும் வேறுபட்ட

நிலையில் காணப்படுகின்றன. இறந்தவர்கள் மரப்பெட்டியில் வைத்துப்புதைப்பது எகிப்து பிரமிடுகளை நினைவூட்டுகிறது. உடல் நீண்டநாள் அழுகாமல் இருக்க உடம்பைப் பதப்படுத்தும் வழக்கம் தமிழரிடமும இருநதுள்ளது. முன்பெல்லா இறந்தவர்களைத் மண்தாழியில் வைத்துப் புதைத்தனர். இயற்கை மரணம் எய்தியவர்களைப்



புதைப்பதும், தற்கொலை செய்து கொண்டவர்களையும் நோயினால் இறப்பவர்களையும் எரிப்பதும் இவ்வின மக்களின் வழக்கமாகும்



இறந்தவர்களை இருபத்திநான்கு மணிநேரத்திற்குள் இருள்சூழும் முன் அடக்கம் செய்கின்றனர். ஒவ்வொரு ஊரிலும் ஒரு மயான இருப்பதும் உண்டு. ஒருசில பகுதிகளில் அவரவரின் சொந்த நிலத்தில் புதைக்கின்றனர். கருங்கற்களைக் கொண்டு சமாதி அமைத்து அதைச்சுற்றிலும் பூச்செடிகளை நட்டு வளர்ப்பர். அந்தப்பூக்களை எவரும் தலையில் சூடிக்கொள்வதில்லை.

*“இன்று தமிழகத்தில் இறந்தவருக்காகச் செய்யப்படும் இறப்புச் சடங்குகள் முன்னோர் வழிபாட்டின் எச்சமே இறந்துபட்ட மனிதனின் ஆவியைச் சடங்குகளின் தெய்வநிலைக்கு உயர்த்துவதாகவே இறப்புச் சடங்குகள் அமைகின்றன”(கொங்கு நாட்டுப்புற தெய்வ வழிபாடு, பக்.46-48)* என்று தே. ஞானசேகரன் குறிப்பிட்டுள்ளார்.

**உறவினர்களை அழைத்தல்**

மலையாளி சமுதாயத்தில் ஒருவர்இறந்த செய்தியைக் கவுண்டன் கங்காணியிடம் அறிவிக்கிறார்கள் அவர்கள் இருவரும் சேர்ந்து இறந்தவரின் உறவினர்கள் பட்டியலைக் கேட்டறிகிறார்கள் இளைஞர்களை வரவழைத்து ஊருக்கு இருவரை அனுப்பி சென்றுவருவதற்கு உரிய பணத்துடன் தகவல் சொல்ல அனுப்பிவைக்க தகவலாளிகள் உறவினரிடம் தகவலைச் சொல்லி விரைந்து ஊர்திரும்புவார்கள். அனைத்து உறவினர்களும் வந்துள்ளதை உறுதிச்செய்த பின்னரே உடல் அடக்கத்திற்கான நிகழ்வுகள் தொடங்கும்.

**பிணச் சடங்குகள**

“இறந்த தகவல் தெரிந்தவுடன் கங்காணி ஊரிலுள்ள அனைவருக்கும் தெரிவிப்பான். சடங்குகளை முன்னின்று செய்வர். இறந்தவுடன் பிணத்தை நாற்காலி, மரக்கட்டிலில் உட்கார்ந்த நிலையில் அமர்த்தி நெற்றியில் ஒரு ரூபாய் நாணயத்தை ஒட்டி மஞ்சள் கலந்த அரிசியை வாயில் வைத்து வெள்ளைத்துணியால் வாய் கட்டுகிறார்கள். இருக்கமாக இரு பெருவிரலையும் ஒன்றாக கட்டி இருக்கை அருகில் ஊதுபத்தி ஏற்றி வைக்கிறார்கள். இப்பழங்குடியினர் பிணத்தின் பக்கத்தில் உடைக்காததேங்காய், பழம்,அவுள் போன்ற பொருட்களை வைக்கின்றனர். கால் இருக்கும் பக்கத்தில் ஒருசொம்பில் அரிசியும் மற்றொரு சொம்பில் தண்ணீரும் வைக்கப்படுகிறது. அதோடு மட்டும் அல்லாமல் இறந்தவர் எப்படி இறந்தார் என்றும் பார்க்கின்றனர் அதாவது “நூல் கயிற்றின் அடியில் இரண்டு வெப்பமான மண்குடுவை வைத்து அதில் ஒரு மண்குடுவையில் அவுள் போடுகின்றனர் அப்போது கருகி இருந்தாள் இறந்தவர் இயற்கையாக சாகவில்லை என்று மக்கள் தீர்மானிக்கின்றனர் கருகாமல் இருந்தால் இயற்கையாக மரணம் அடைந்ததாக அர்த்தம்” என்று ராமன்(வயது- 56) கூறுகிறார்.

மேலும், இம்மக்கள் கரிராமண் தெய்வத்தை வணங்குவதால் இறந்தவர் உடலை அபிஷேகம் செய்கிறார்கள் ஏழுகுடம் நீரை ஊரிலுள்ள பெண்கள் வீட்டிற்கு கொண்டுவந்து

வைக்கவேண்டும். பிணத்தைக் குளிப்பாட்ட ஓலைப்பாலை பயன்படுத்துகின்றார்கள். இறந்தவரின் தலைக்கு மகனோ மருமகளோ எண்ணெய் வைத்து உடல்முழுதும் மஞ்சள்பூசி ஒவ்வொரு குடநீர் ஊற்றி குளிப்பாட்டி விட்டு அபிஷேகம் செய்து தலைக்கு பின்பக்கம் ஊதுபத்தி காட்டுகின்றனர். முதலில் பசும்பாலில் அபிஷேகம் செய்கிறார்கள.; அடுத்ததாக பன்னீர் அபிஷேகம் செய்கிறார்கள்.அடுத்ததாக குங்குமம் அபிஷேகம் செய்கிறார்கள் வாசனைத்திரவியங்களைப் பூசிப் புத்தாடை (கோடி) போர்த்தி பாடையில் அமர வைக்கின்றனர். கணவன் இறந்த மனைவியின் கைக்கு வளையலும் தலைக்குப் பூவும் சூட்டுகின்றனர். இவர்கள் பாடை என்பதைத் தேர் என்று சொல்கிறார்கள்.

**சவக்குழி தோண்டுதல்**

உறவினர்களுக்குத் தகவல் தெரிவித்தவுடன் அடக்கத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்குவர். பிணத்தை புதைப்பதே தமிழரின் வழக்கம். பிணம் புதைப்பதற்கான இடத்தை தெரிவு செய்து இரண்டு ஆண்கள் குழியைத் தோண்டும்பொழுது இளகு மண்ணாக இருப்பின் இறந்தவன் நல்லவனாக வாழ்ந்துள்ளான் என்று கற்கள் வெளிப்படுமாயின் பாவங்கள் செய்தவன் என்றும் கருதுகின்றனர். ஆறடி ஆழமும் மூன்றடி அகலமும் ஏழடி நீளமும் உள்ளதாக வடக் தெற்காகக் குழியைத் தோண்டுகின்றனர்.

**கோடியிடுதல்**

மாமன் மச்சான் முறையானவர்கள் மட்டுமே இறந்தவருக்கு கோடித்துணிப் போர்த்த வேண்டும். வேட்டி அரிசி ஆகியவை கொண்டு வருவர் ஆண்கள் அழுவது கிடையாது இறந்தவரின் குடும்பத்தார்க்கு உறவினர்கள் இருகைகளால் தழுவி ஆறுதல் கூறுவர். பெண்கள் கதறி அழுவதும் ஒப்பாரி வைப்பதும் கட்டிதழுவி அழுவதும் நிகழும். பிணத்தைச் சுடுகாடு கொண்டு சென்று புதைக்கும் இடம்வரை பெண்கள் நெய் பந்தம் பிடித்துச் செல்கிறார்கள்.

**தாலியறுத்தல்**

கணவனை இழந்த பெண்கள் தங்கள் வாழ்வு நிற்கதியானதை கருதி மங்கலஅணிகலன்கள் பூ,பொட்டு, வாசனைத் திரவியம் அணியாமலும், வளை முதலிய எந்த அலங்காரமும் இன்றி தங்கள் முன்னோர்கள் வழிமுறைப்படி வெந்நிற ஆடை உடுத்தி வாழ்கின்றனர்.

*“மெல்இயல் மகளிரும் இழை களைந்தனரே”(புறம்-224)*

கரிகாலன் இறந்ததால் மெல்லிய இயல்பையுடைய உரிய மகளிரும் அருங்கல அணி முதலான அணிகளை நீங்கினர் என்பதை கருங்குழலாதனார் புறநானூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகிறது.

*“கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி*

*அல்லி உணவின் மனைவியொடு”(புறம் - 250)*

என்ற பாடலில் மயிரைக் கத்தரித்து வளையலை நீக்கி அல்லி அரிசியை உணவாகக் கொண்டு வாழுவதை தாயங்கண்ணியார் புறநானூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகிறது.மேலும், “கணவன் இறந்துவிட்டால் கனவுகளில் மிதக்கவேண்டிய மனைவி கண்ணீரில் மிதக்க வேண்டும் கணவனை இழந்துவிட்டால் அவளுக்குப் பூவும் பொட்டும் சொந்தமில்லை என்கிறார் டாக்டர் சு. சக்திவேல் ”6 கூறுகிறார்.

**அடக்கம் செய்தல்**

இறந்தவர்உடலை பங்காளி முறையுள்ளவர்கள் மட்டுமே பிணத்தை சுமந்து சென்று தேரில் வைக்கும் வழக்கம் இங்கு காணப்படுகின்றது. சனிக்கிழமையில் இறந்தால் பிணத்துடன் கோழியை சேர்த்து புதைக்கும் பழக்கம் இம்மக்களிடத்தில் காணப்படுகிறது. இதனை “சனிப்பிணம் தனியே போகாது” என்று பழமொழி இன்றளவும் வழக்கில் உள்ளது.

சுடுக்காட்டிற்குச் செல்லும் வழியில் பாதித்தொலைவில் தேரை மூன்றுமுறை கீழே இறக்கி மீண்டும் உயர்த்தித் திருப்பிகொள்வர். இதைப் ‘பாடைமாற்றுதல்’ என்பர். பாடைசெல்லும் வழி நெடுகிலும் அவுள் அரிசிப்பொரிகளைத் தூவிச்செல்வர். இதுவுடன் சில்லரை காசுகளை இறைக்கும் வழக்கமும் உண்டு.

சுடுகாட்டிற்கு சென்று உடலை குழியில் பாடையில் வைத்து ஆன் இறந்தால் இளையமகனும் பெண்ணாக இருந்தால் மூத்த மகன் தோலில் மண்குடுவையை சுமந்து மூன்று முறை சுற்றி வரச்செல்லி அதை ஒவ்வொரு சுற்றுக்கும் ஒரு துளையிடுவர். பின்பு தலைப்பகுதியில் அக்குடத்தை உடைக்கசொல்லுவர். பிணத்தை குழியில் இட்டப்பின்பு தன்மகன் மூன்று முறை

புறங்கையால் மண்ணை தள்ளிவிட்டு குழியை மூடுகின்றனர். இறந்தவர் பயன்படுத்திய துணிகளையும் பொருட்களையும் தலைமாட்டில் போட்டு வருகின்றனர்.

**பிற சடங்குகள் செய்தல்**

இறந்த மூன்றாம் நாள் வரை புதைத்த குழுயிலே ஆவி சுழன்று கொண்டிருப்பதாக நம்புகின்றனர். அதனால் அவர்கள் புதைக்குழி அருகே மூன்றாம் நாள் பால் வைக்கின்றனர். இறந்தவர்வந்து அருந்திச்செல்வார் என்ற நம்பிக்கை இன்றளவும் சித்தேரிமலை மக்களிடம் காணப்படுகிறது.

புதைத்த குழியைச் சுற்றிலும் கருங்கல்லினால் ஒரு அடி உயரம் சுவர்வைத்து மண்நிரப்பி அதில் செண்டுமல்லி, வாடாமல்லி, அரளி போன்ற விதைகளைத் தூவி விடுவதை காணமுடிகிறது.

இறந்தவரின் ஆத்மா அமைதிகொள்ள பதினோராம் நாள் உறவினர்களை அழைத்து காரிங்கள் செய்வர்கள் அதில் இரவு முழுவதும் இறந்தவரை நினைத்து அழுது அவர்க்கு படையல் செய்த அவ்வுணவினை அவரின் நினைவாக ஏதேனும் ஒருபொருள்வைத்து படைத்து அங்குள்ளவர்கள் உணவு அருந்துவர், சடங்குசெய்தவர்களுக்கு வேட்டி புடவை போன்றவை கொடுக்கும் வழக்கமும் உண்டு. காரியம் முடிந்து ஓராண்டு வரையில் எந்த ஒரு சுபநிகழச்சியும் அந்தக் குடும்பம் செய்வதில்லை.

**முடிவுரை**

சனிக்கிழமை இறந்தால் அவர்மற்றோருவரை அழைத்துசெல்வர்என்ற நம்பிகையை கொண்டுள்ளனர். அதனால் பிணத்துடன் கோழி ஒன்றை சேர்த்து புதைக்கும் வழக்கம் அங்கு காணப்படுகிறது. வெள்ளிக்கிழமையில் இறந்தால் இறைவனை நேரடியாக அடையமுடியும் என்ற நம்பிக்கையும் அங்கு உண்டு இறந்தவர்உடலுக்கு சடங்குகளைச் செய்தவர் மூன்றாம் நாள் பால் வைத்தால் அவர்குடித்துவிடுகிறார் என்று மக்கள் நம்புகின்றனர். இறந்தவர் இறைவனை சேரவேண்டும் என்பதற்காக தங்களின் குலமரபு மாறாமல் சடங்குமுறைகளைச் செய்தால் அவர்ஆத்மா சாந்தம் ஆகிவிடும் என்று மக்கள் கூறுகிறார்கள்.

**துணைநூற் பட்டியல்**

1. ஔவை துரைசாமி(உரை.ஆ), புறநானூறு, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம் லிமிடேட், சென்னை, 1951
2. சக்திவேல், டாக்டர் சு., நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2023
3. ஞானசேகரன், தே., கொங்குநாட்டுப்புற தெய்வ வழிபாடு, பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர், 2002

**தகவலாளி**

சித்தேரிமலை -ராமன் (வயது -56)

*****